அதுபற்றிக் கவனிக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பித்தால் அவர்கள் நிலைமையை அறிந்து அரசுக்குத் தெரிவிக்க, அரசு தேர்வாணையத்திற்குத் தெரிவித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. க. அர்ச்சுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வரவில்லை என்பது வேறு. நான் அதே தொகுதியிலே இரண்டு மூன்று முறை தேர்தலில் நின்றவன். அங்கிருக்கிற வாக்காளர்கள் அங்கே வாக்குப் போடுவதற்குண்டான முயற்சிகளில் ஈடுபடும் போது, அவர்கள் அவ்வளவு தூரம் நடந்து சென்று வாக்களிப்பதற்கு விரும்புவதில்லை. இந்தச் சூழ்நிலையில் அதே கிராமத்தில் புதிதாக தற்போது காமனேரி என்கிற பகுதியிலே ஒரு புதிய ஆரம்பப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த வாழைநாசம் பட்டியில் வாக்களிப்பதைவிட இது கிட்டத்தட்ட இரண்டு கிலோ மீட்டர் குறுகிய இடத்திலே இருக்கின்ற காரணத்தினால் இந்த வாக்காளர்கள் அந்த காமனேரி என்கிற ஆரம்பப் பள்ளியிலே வாக்களிப்பதற்குண்டான சூழ்நிலை உருவாக்கப் படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்பு மிகு பேரவைத் தலைவரவர்களே, வாக்காளர்களும் விண்ணப்பிக்கவில்லை என்பது பல காரணங்களிலே அதுவும் ஒன்று. ஆனால் மிக முக்கியமான காரணம், 195 வாக் காளர்களுக்கு மட்டுமே தனி வாக்குச் சாவடி அமைப்பதற் கில்லை என்பது ஒன்று. இரண்டு கிலோ மீட்டர் தூரம் அவர்கள் நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, 195 வாக்காளர்களோடு சேர்த்து வேறு பல சாவடிகளில் அதிகமான வாக்காளர்கள் ஏற்பட்டு அதைப் பிரித்து 700 வாக்காளர்கள் கொண்டு வருகிற சூழ்நிலை ஏற்படுமேயானால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவது போன்று மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் பரிந்துரை செய்வார்களேயானால் அது பற்றி அரசு கவனிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 42, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

42—

நீதிமன்றங்களில் நகல் எழுத்தர்கள் பணியில் சேரும்போது சொந்தமாக தட்டச்சு இயந்திரம் கொண்டுவருதல்.

*9469—டாக்டர் எம். கருப்புசாமி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீதிமன்றங்களில் பணிபுரியும் நகல் எழுத்தர்கள் (Copyist) பணியில் சேரும்பொழுது சொந்தமாக தட்டச்சு இயந்திரம் (Typewriter) கொண்டுவர வேண்டுமென்ற ஆங்கிலேயர்கள் காலத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனையை அகற்ற அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நீதிமன்றங்களில் பணிபுரியும் நகல் எழுத்தர்கள் பணியில் சேரும் பொழுது சொந்தமாக தட்டச்சு எந்திரம் கொண்டு வரவேண்டுமென்று ஆங்கிலேயர்கள் காலத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனையை அகற்ற வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையை ஏற்று நீதிமன்றங்களில் பணிபுரியும் நகல் எடுப்பவர் பதவியையும் தட்டச்சர் பதவியையும் இணைத்து ஒரே ஊதிய விகிதத்தில் கொண்டு வந்த பின்னர் நகல் எடுப்பவர்களுக்கு இயந்திரம் வழங்கலாம் என்ற கருத்து அரசின் பரிசிலனையில் உள்ளது.

(ஆ) இறுதி முடிவு எடுத்தபின் தகுந்த நடவடிக்கை உடன் எடுக்கப்படும்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

முற்பகல் 10-05

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு நடத்தும் பஸ்களில் டிரைவர்களாகப் பணிபுரிபவர்களை, அவர்கள் சொந்தமாக பஸ் கொண்டுவந்தால்தான் ஓட்டமுடியும் என்பது எவ்வளவு கேலிக்குரியதாக இருக்கிறதோ அதேபோலத்தான் மிகவும் ஏழையான அந்த நகல் எழுத்தர்கள் பணியில் சேரும்போது சொந்தமாக டைப்ரைட்டர்கள் கொண்டு வரவேண்டுமென்பது. இவ்வாறு ஆங்கிலேயர் காலத்தில் விதிக்கப்பட்ட அந்த நிபந்தனை, சுதந்திரம் கிடைத்து இத்தனை வருடங்கள் ஆகியும் நீக்கப்படாமல் உள்ளது. அதனை உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து, இந்த சட்டசபையில் அவ்வாறு தட்டச்சர்கள் டைப்ரைட்டிங் இயந்திரங்களைக் கொண்டு வரக்கூடாது என்று ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவர முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினாவிற்கு இரண்டு அம்சங்களில் நான் விடையளிக்க விரும்புகிறேன். ஒன்று, ஆங்கிலேயர் காலத்தில்

1993 அக்டோபர் 28]

இந்த காபியிஸ்டுகள் எல்லாம் டைப்ரைட்டிங் மெஷின்களைக் கொண்டு வரவேண்டுமென்றிருந்தது. சுதந்திரம் பெற்றபிறகு, 1948 ஆம் ஆண்டு அப்படி டைப்ரைட்டர் கொண்டு வருகிற காபியிஸ்டுகளுக்கு 'அலவன்ஸ்' ஆக ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்பட்டது. பிறகு, 1988 ஆம் ஆண்டில் அது 30 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இன்றையதினம், அவர்களுக்கு டைப்ரைட்டர் அரசாங்கமே வாங்கித்தர வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. அந்தக் கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மிக ஆழமாகப் பரிசீலனை செய்து, இது ஒரு அவசியமான தேவை என்று கருதி, கடந்த 15—9—1993 அன்று ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதாவது அவர்களுக்கு டைப்ரைட்டர் அரசாங்கமே வாங்கித் தரவேண்டுமென்ற ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த ஆணையின் அடிப்படையில் உயர்நீதிமன்றத்திற்கு நாங்கள் எவ்வளவு டைப்ரைட்டர்கள் தேவைப்படும்; அதற்குரிய டெக்னிகல் குவாலிபிகேஷன்—கல்வித் தகுதி என்ன; அதற்கு அரசுக்கு ஏற்படக்கூடிய செலவுகள் எவ்வளவு என்பதைப்பற்றியெல்லாம் எழுதி இருக்கிறோம், 15—9—1993 அன்று. எனவே, விரைவில் உயர்நீதிமன்றம் அந்த விவரங்களையெல்லாம் அனுப்பியபிறகு அவர்களுக்கெல்லாம் டைப்ரைட்டர்கள் கொடுக்கப்படும்.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாக டைப்ரைட்டர்கள் வழங்கப்படாமல் இருந்த அந்தத் தட்டச்சர்களுக்கு, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தட்டச்சு இயந்திரங்களை வழங்குவதற்கு அனுமதி தந்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளும் அதேவேளையில், அதேபோன்று நகல் எழுத்தர்கள் தமிழகத்தில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்காக அரசாங்கத்தின் சார்பில் எத்தனை டைப்ரைட்டர்கள் வழங்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நீதிமன்றத்திலும் இப்போது அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட அந்த டைப்ரைட்டர் இருக்கிறது. அதுவும் மிகப்பழமையான காலத்திலிருந்து இருக்கிறது.

அதை ரிப்பேர் செய்ய வேண்டுமென்றாலும், இப்போது இருக்கிற காபியிஸ்டுகளே அதற்குச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. எந்தவிதமான வருமானமின்றி, தங்களுடைய சொந்தச் செலவிற்கான பணத்தை அதற்கு ஈடுசெய்ய வேண்டியிருக்கிறது. அவ்வாறு அவர்கள் செய்யும் செலவுத் தொகையை அரசாங்கம் திருப்பிக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி ஆராயப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எச். எம் ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் மிக விளக்கமாகச் சொன்னார்கள். நீதிமன்றங்களில் பணிபுரியும் தட்டச்சர்களை இரண்டுவகை தட்டச்சு இயந்திரங்களைக் கொண்டு வரவேண்டுமென்று சில சந்தர்ப்பங்களில் கேட்கிறார்கள். ஆங்கிலத்திலும் வேண்டியிருக்கிறது; தமிழிலும் வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு தட்டச்சரும் இரண்டு இயந்திரங்களை அங்கே கொண்டுவந்தால்தான், அவர்களுக்கு சம்பளமே கொடுக்கப்படும் என்கிறார்கள். அந்த வகையிலே ஆங்கிலத்தில் அவர்கள் டைப் அடித்தாலும், தமிழில் டைப் அடித்தாலும், இரண்டையுமே அரசாங்கம் அவர்களுக்கு வாங்கிக் கொடுத்து உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம் தான் இதை நிர்ணயம் செய்ய வேண்டும். எனவேதான் அவர்களிடத்திலே ஆலோசனை கேட்டிருக்கிறோம் அவர்கள் சொல்லுகிற ஆலோசனையின்படி அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 43, திரு. தேனி பன்னீர்செல்வம், கேள்வி கேட்ட உறுப்பினர் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக டாக்டர் வெ. புருஷோத்தமன் கேட்கிறார். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS